بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ
وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுல்அவ்வல் 16 ★ அபா 13 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 13 அக்டோபர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا
بَعْدَ اِذْ هَدَيْتَنَا
وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً
اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

**பொருள் :**
எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர் வழிகாட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய்.
(ஆலி இம்ரான்:9)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கிறிஸ்தவர்கள் செய்துள்ள ஆட்சேபனைகளை நான் ஒன்று திரட்டியுள்ளேன். அவற்றின் எண்ணிக்கை மூவாயிரம் வரை எட்டியுள்ளது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

اَلدَّجَّال : தஜல் என்பது ஒரு பொருள் உள்ளுக்குள் கேடானதாகவும் வெளியில் ஒரு தூய பொருளாகவும் இருப்பது ஆகும். உதாரணமாக, மேலே தங்க முலாம் பூசப்பட்டு, உள்ளே தாமிரம் இருப்பதாகும். உலகின் துவக்கம் முதல் இந்த தஜல் (மோசடி) நடந்து வருகிறது. வஞ்சகம் மற்றும் ஏமாற்றுதல் இல்லாத ஒரு காலமே இல்லை. உலகின் பணிகளில் தஜல் (மோசடி) நடப்பது போன்றே ஆன்மீகப் பணிகளிலும் வஞ்சகம் நடக்கின்றது.

يُحَرِّفُوْنَ الْكَلِمَ عَنْ مَّوَاضِعِهٖ

(4:47) என்பதன் பொருளும் வஞ்சகம் ஆகும். அவர்கள் يٰعِيْسٰى اِنِّىْ مُتَوَفِّيْكَ (3:56) என்பதை மாற்றுகின்றனர். ஆயினும், இறுதிக் காலத்து தஜல் மாபெரும் தஜல் ஆகும். தஜ்ஜாலிய்யத்தின் ஒரு நதி ஓடுவதைப் போன்று இருக்கும். பல்வேறு காலகட்டங்களில் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனைகள் செய்யப்பட்டன. ஆயினும், அவை ஓர் எல்லைக்குட்பட்டதாகவே இருந்தன. ஆனால், ஒரு காலம் வர உள்ளது. அப்போது, ஆட்சேபனைகளின் ஒரு நதி ஓடத் துவங்கிவிடும் என்பதை இறைவன் அறிந்திருந்தான். சிறு சிறு ஆறுகளும், நதிகளும் இணைந்து சமுத்திரமாக ஆகுவது போன்று ஒட்டு மொத்த தஜலும் (மோசடியும்) இணைந்து ஒரு மாபெரும் தஜலாக ஆகிவிடும்.

ஆக, இந்தக் காலத்தில் எவ்வளவு பெரும் தஜல் நடக்கின்றது? என்பதை பாருங்கள். இஸ்லாத்தின் மீது குற்றச்சாட்டுகளும், ஆட்சேபனைகளும் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்களோ வரம்பு மீறிவிட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கிறிஸ்தவர்கள் செய்துள்ள ஆட்சேபனைகளை நான் ஒன்று திரட்டியுள்ளேன். அவற்றின் எண்ணிக்கை மூவாயிரம் வரை எட்டியுள்ளது. அனுதினமும்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்

## தூய்மையானவை என்பதற்கு எங்கு உடல்ஆரோக்கியத்தின் அடிப்படையில் நல்லதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதோ அங்கு அதனை உண்பதால் மனிதனின் ஏனைய உணர்வு அல்லது மற்ற மனிதனுடைய அல்லது மற்ற படைப்பினத்தின் உரிமை பறிக்கப்படாமல் இருப்பதும் நிபந்தனையாகும்.

اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ
وَالدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ وَمَاۤ اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ ۚ
فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

பொருள்: தானாகச் செத்ததையும், இரத்தத்தையும், பன்றி இறைச்சியையும், அல்லாஹ் அல்லாத வேறு பெயர் கூறப்பட்ட பொருள்களையுமே அவன் உங்களுக்கு விலக்கியுள்ளான். ஆனால், (ஷரீஅத்திற்கு) முரண்பட்ட எண்ணமில்லாமலும், வரம்புகளை மீறுவதற்கான எண்ணம் இல்லாத நிலையிலும் (அவற்றுள் ஏதாவது பொருளை உண்பதற்குக்) கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டால், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான் (என்பதை நினைவில் கொள்க). (அந்நஹ்ல்:116)

இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், உணவுப் பொருட்கள் தொடர்பாக இஸ்லாம் ஹராம், மம்நூஃ, ஹலால், தய்யப் என பல படித்தரங்களை கூறியுள்ளது. ஹராம் என்பது திருக்குர்ஆன் தடுத்துள்ள விஷயங்கள் ஆகும். மம்நூஃ என்பது திருக்குர்ஆன் கூறிய விதிமுறைகளுக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ள விஷயங்கள் ஆகும் அல்லது பிற்காலத்தில் அறியப்பட்ட பொருட்களைக் குறித்து ஆராய்ச்சிகள் செய்து விரும்பத் தகாதவை என முஸ்லிம்கள் ஆக்கிக் கொண்ட பொருட்கள் ஆகும். ஹலால் என்பவை தனது அசல்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்

## நபிமொழி

### பிள்ளைகளுக்கு செலவு செய்வதற்காக கணவருக்கு தெரியாமல் சிறிது பணம் எடுப்பது

(2211) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஆவியாவின் தாயாரான ஹிந்த் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம், (எனது கணவர்) அபூஸுஃப்யான் மிகவும் கருமியாக இருக்கின்றார். இந்நிலையில், அவரது செல்வத்திலிருந்து அவருக்கு தெரியாமல் கொஞ்சம் எடுத்தால் அது என் மீது பாவம் ஆகுமா? எனக் கேட்டார்.

அதற்கு, உமக்கும், உமது மகன்களுக்கும் போதுமானதாக இருக்கும் அளவில் நீர் (அவரது) செல்வத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### இறந்தவற்றின் தோலை பயன்படுத்துவது ஆகுமானது

(2221) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறந்த ஒரு ஆட்டை கடந்து சென்றார்கள். அப்போது, நீங்கள் இதன் தோலை ஏன் பயன்படுத்துவதில்லை? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அது இறந்த ஆடாயிற்றே? என்று அவர்கள் கூறினர்.

அதனை உண்பது மட்டுமே ஹராம் ஆகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி-தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு-2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகமுக்குரிய நற்பண்புகளைப் பற்றிய குறிப்புகள்**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டு ஜமாதில் ஆகிர் 22 ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 63 ஆவது வயதில் மரணமடைந்துவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் 2ஆண்டுகள் மூன்று மாதம் 10 நாட்கள் வரை இருந்தது**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதே அறையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கப்ருடன் இரவுநேரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 செப்டம்பர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு தபூக் மாதம் **09ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۞
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் சில சம்பவங்கள் உள்ளன. அதனை நான் (இன்று) எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணநேரம் அருகில் வந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை அழைத்து எனக்கு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து கூறுங்கள் என்று கூறினார்கள். அப்போது, அன்னார் (ரலி) அதாவது, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்த எனது கருத்து அன்னாரின் இயல்பில் கடினம் உள்ளது என்பதை தவிர உயர்வானதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: (அவரின் இயல்பில்) கடுமை இருப்பதற்கான காரணம் அவர் என்னிடத்தில் மென்மையைப் பார்க்கின்றார். அவரிடத்தில் அமாரத் (தலைமைத்துவம்) ஒப்படைக்கப்பட்டால், பின்னர் அவர், தம்மிடத்தில் இருக்கும் பல விஷயங்களை விட்டுவிடுவார். ஏனெனில், நான் அவரிடத்தில் இந்த விஷயத்தை கண்டுள்ளேன். அதாவது, நான் ஒருவரிடத்தில் கடுமை காட்டினால், நான் அந்த நபரிடம் திருப்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் முயற்சி செய்வார். நான் ஒருவரிடத்தில் மென்மையுடன் நடந்து கொண்டால், நான் கடுமையாக நடக்க வேண்டும் என்று அவர் என்னிடம் கூறுவார்.

இதன் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அன்னாரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து விசாரித்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்னாரின் வெளிப்புறம் உட்புறத்தை விடவும் சிறந்ததாகும். நம்மில் அவரைப் போன்ற நபர் (வேறு) எவரும் இல்லை.

அப்போது, நான் உங்கள் இருவரிடமும் கூறியவற்றை பற்றி வேறு எவரிடமும் அதைக் குறித்து பேச வேண்டாம். பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தவிர்த்துவிட்டால், உஸ்மானைத் தாண்டி செல்ல மாட்டேன். அவர் உங்கள் விவகாரத்தில் எந்த குறைவும் செய்யமால் இருப்பதற்கு, அவருக்கு அதிகாரம் இருக்கும். நான் உங்களின் விவகாரங்களிலிருந்து விலகிவிடுவதும், உங்களிடமிருந்து திரையில் இருப்பதும் எனது தற்போதைய விருப்பம் ஆகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நோய்வாய்பட்டிருந்த நாட்களில், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து கூறினார்கள்:

தாங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மக்களுக்கு கலீஃபா ஆக்கி விட்டீர்கள். ஆனால், தாங்கள் இருக்கும்போதே அவர் மக்களுடன் எவ்வாறு நடக்கின்றார் என்பதை தாங்கள் அறிவீர்கள்! அவர் தனியாக இருக்கும்போது நிலைமை என்னவாக இருக்கும்? நீங்கள் உங்களின் இறைவனை சந்திப்பீர்கள். அவன் தங்களிடம் மக்களைக் குறித்துக் கேட்பான். அதாவது, உங்களின் கீழ் இருந்த மக்களைக் குறித்து அல்லாஹ் தங்களிடம் கேட்பான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்போது படுத்திருந்தார்கள். என்னை அமர வையுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார் அமர வைக்கப்பட்டார்கள். அன்னாரும் ஊன்றுகோல் உதவியுடன் அமர்ந்து கொண்டார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்; நான் எனது இறைவனிடத்தில் சென்று அவனை சந்திப்பேன். மேலும் அவன் என்னிடத்தில் கேட்டால், நான் உனது அடியார்களில் (மிகச்)சிறந்த நபரை உனது அடியார்களுக்கு கலீஃபாவாக ஆக்கியுள்ளேன் என்று நான் பதிலளிப்பேன்.

(அல்காமில் ஃபித் தாரீக் லி இப்னி கஸீர், தொகுதி 2, பக்கம் 272-273, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் லெப்னான், 2003)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக வரலாற்று புத்தகங்களின் அடிப்படையில் எடுத்துரைக்கின்றார்கள்;

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியபோது, அன்னார் (ரலி) அவர்கள், தான் யாரை கலீஃபாவாக ஆக்குவது என்பது பற்றி ஆலோசனை செய்தார்கள். பெரும்பாலான சஹாபிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அமாரத் தொடர்பாக கருத்து தெரிவித்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் அதிக கடுமை உள்ளது. எனவே மக்கள் மீது அன்னார் (ரலி) கடுமை காட்டிவிடக் கூடாது என்று சில மக்கள் ஆட்சேபனை செய்தனர். அப்போது, இந்தக் கடுமை என்பது அன்னார் மீது பொறுப்பு சுமத்தப்படும் வரை மட்டுமே இருக்கும். இனி, அன்னார் (ரலி) மீது பொறுப்பு சுமத்தப்பட்டு விடும்போது, அன்னாரிடம் உள்ள கடுமையான இயல்பு நடுநிலை பாங்கின் கீழ் வந்துவிடும். எனவே, அனைத்து சஹாபிகளும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் திருப்தி அடைந்துவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களின் உடல்நலம் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உடல் நலம் மிகவும் சீர்கெட்டிருந்தது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மனைவி அஸ்மா (ரலி) அவர்களின் துணை கொண்டு, தமது பாதங்கள் தடுமாறிக் கொண்டிருந்த நிலையிலும், தமது கைகள் நடுங்கிக் கொண்டிருந்த நிலையிலும், அன்னார் (ரலி) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை

தந்தார்கள்.

மேலும் அனைத்து முஸ்லிம்களிடமும் சொற்பொழிவாற்றியவாறு அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

உங்களது கலீஃபாவாக யார் இருப்பார்? என்பது பற்றி நான் நீண்ட நாட்கள் வரை தொடர்ச்சியாக சிந்தித்து வந்தேன். நிறைய சிந்தித்து பார்த்த பிறகும், துஆக்கள் செய்த பிறகும் இறுதியில் உமரை உங்களின் கலீஃபாவாக நியமித்து விடுவதை நான் மிகவும் உகந்ததாக கருதியுள்ளேன். எனவே எனது மரணத்திற்குப் பின்னர் உமர் உங்களின் கலீஃபாவாக இருப்பார்.

அனைத்து சஹாபிகளும், ஏனைய மக்களும் அந்த அமாரத்தை (தலைமைத்துவத்தை) ஒப்புக் கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் பைஅத்தும் செய்யப்பட்டது. (கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம், தொகுதி 15, பக்கம் 483-484)

அடுத்து இது தொடர்பாக ஓரிடத்தில், நியமனம் ஏன் செய்தார்கள்? என்ற இந்த ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்;

சமுதாயம் தேர்ந்தெடுப்பதன் மூலமாகவே ஒருவர் கலீஃபா ஆக முடியும் என்கிறபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏன் நியமனம் செய்யப்பட்டார்கள்? இதற்கான பதில் என்னவென்றால், அன்னார் (ரலி) அவர்கள் எளிதாக நியமனம் செய்துவிடவில்லை. மாறாக, முதலில் அன்னார் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தது நிருபணம் ஆகியுள்ளது. இந்த அளவு மட்டுமே வித்தியாசம் உள்ளது. அதாவது மற்ற கலீஃபாக்கள் முந்தைய கலீஃபாவின் மரணத்திற்கு பின்னர் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கும்போதே கலீஃபாவாக தேர்ந்தெடுக்கபட்டுவிட்டார்கள். அடுத்து அன்னார் அத்துடன் நிறுத்தவில்லை. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இத்துடன் நின்று விடவில்லை. சில சஹாபிகளுடன் ஆலோசனை செய்த பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை அறிவித்துவிடுவதை மட்டும் போதுமானதாகக் கருதவில்லை. மாறாக, கடுமையான இயலாமை மற்றும் பலவீனத்திற்கு மத்தியிலும் அன்னார் (ரலி) அவர்கள் தமது மனைவியின் உதவியுடன், பள்ளிவாசலை சென்றடைந்தார்கள். மேலும் கூறினார்கள்:

மக்களே! நான் சஹாபிகளிடம் ஆலோசனை செய்த பிறகு, கிலாஃபத்திற்காக உமர் (ரலி) அவர்களை விரும்பியுள்ளேன். நீங்களும் அவரது கிலாஃபத்தை ஒப்புக் கொள்கின்றீர்களா?

அப்போது, அனைத்து மக்களும் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தினர். ஆக, இதுவும் ஒரு வகையில் தேர்தலாகவே இருந்தது. (கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம், தொகுதி 15, பக்கம்-555)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நோய் மற்றும் வஸிய்யத் தொடர்பாக தாரீகே தபரியில் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நோய் மற்றும் மரணம் பற்றி இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டதற்கு காரணியாக என்ன விஷயம் அமைந்தது என்றால், அன்னார் (ரலி) அவர்கள் ஜமாதிவுல் ஆகிர் 7ஆம் தேதி திங்கட்கிழமையன்று நீராடினார்கள். அந்த நாளன்று கடும் குளிர் இருந்தது. அதன் காரணமாக, அன்னார் (ரலி) அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அது பதினைந்து நாட்கள் வரை நீடித்தது. எந்த அளவுக்கு என்றால், அன்னார் ரலி அவர்கள் தொழுகைக்காக வெளியில் வரமுடியாமல் ஆகிவிட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்தி வரவேண்டும் என்று அன்னார் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கிவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களை நலம் விசாரிப்பதற்காக மக்கள் வந்து சென்றனர். ஆனால், நாளுக்கு நாள் உடல் நிலை மோசமாகிக் கொண்டே சென்றது. அந்த நாட்களில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கியிருந்த வீட்டிலேயே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வசித்து வந்தார்கள். அந்த வீடு ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் வீட்டிற்கு முன்னால் அமைந்திருந்தது. நோய்வாய்பட்ட நாட்களில் பெரும்பாலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களே அன்னாரை கவனித்து வந்தார்கள். (தாரீகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 348, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் லெப்னான் 2012)

அன்னார் (ரலி) அவர்கள் பதினைந்து நாட்கள் வரை நோய்வாய்பட்டிருந்தார்கள். தாங்கள் மருத்துவரை அழைத்தால் நல்லது என்று ஒருவர் அன்னாரிடம் கூறினார். அவர் என்னை பார்த்துவிட்டார் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். (மருத்துவராகிய) அவர் என்ன கூறினார்? என்று மக்கள் கேட்டனர். அதற்கு, اِنِّیْ اَفْعَلُ مَا اَشَآءُ நான் விரும்புவதை செய்கிறேன் என்று அவர் கூறியதாக அன்னார் (ரலி) கூறினார்கள்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம்-347, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், லெப்னான் 2012)

மற்றோர் அறிவிப்பில் வருகிறது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோயுற்றபோது, நாங்கள் உங்களுக்காக மருத்துவரை அழைத்து வரட்டுமா? என்று மக்கள் கேட்டனர். அதற்கு, அவர் என்னை பார்த்துவிட்டார் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். மேலும் اِنِّیْ فَعَّالٌ لِّمَا اُرِیْدُ நான் விரும்புவதை நிச்சயம் செய்கின்றேன் என்று அவர் கூறினார். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், அல்முஜ்லித் அஸ்ஸாலிஸ், பக்கம்-148, அபூபக்ர் அஸ்ஸித்தீக், திக்ரு வஸிய்யத் அபீ பக்ர் தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

எவ்வாறு இருப்பினும், என்னை தன்பக்கம் அழைத்துக் கொள்வதே இனி அல்லாஹ்வின் எண்ணமாகும். எந்த மருத்துவரின் தேவையும் இல்லை என்பது அன்னார் (ரலி) அவர்கள் கூறியதன் பொருளாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டு, ஜமாதில் ஆகிர் 22 ஆம் தேதி, செவ்வாய்கிழமை மாலை 63 ஆவது வயதில் மரணமடைந்துவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் 2ஆண்டுகள் மூன்று மாதம் 10 நாட்கள் வரை இருந்தது. (அத் தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், அல் முஜ்லதுஸ் ஸாலிஸ், பக்கம் 151, அபூபக்ர் அஸ் ஸித்தீக், திக்ர் வ வஸிய்யா அபீ பக்ர், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நாவிலிருந்து கடைசியாக வெளிவந்த சொற்கள் திருக்குர்ஆனின் இந்த அருளுக்குரிய வசனமாக இருந்தது:

تَوَفَّنِیْ مُسْلِمًا وَّاَلْحِقْنِیْ بِالصّٰلِحِیْنَ

பொருள்; நான் கட்டுப்பட்ட நிலையில் நீ எனக்கு மரணத்தை தந்தருள்வாயாக. மேலும், என்னை நல்லடியார்களுடன் சேர்த்து வைப்பாயாக. (யூஸுஃப்-102)

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-அபூபக்ர் அஸ்ஸித்தீக், பக்கம்-478, இஸ்லாமி குதுப் கானா, லாஹூர்)

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் மோதிரத்தில் نِعْمَ الْقَادِرُ اللّٰه என்று பதிக்கப்பட்டிருந்தது.

பொருள்: அல்லாஹ்வே மிகவும் வல்லமை மிக்கவன் ஆவான். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 3, பக்கம் 158, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1990)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனது நல்லடக்கத்திற்கு பிறகு,வேறு ஏதாவது விஷயம் மீதம் இருக்கின்றதா? என்று பார்க்கவும்.

மற்ற விஷயங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அவ்வாறிருந்தால், அதனை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பி விடவும்.

நல்லடக்கம் தொடர்பாக அன்னார் (ரலி) கூறினார்கள்:

தற்போது உடலில் உள்ள ஆடையை சுத்தம் செய்து மற்ற ஆடைகளுடன் கஃப்ன் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இது பழைய ஆடையல்லவா? கஃப்ன் துணி புதிதாக இருக்க வேண்டுமே? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, மரணித்தவர்களை

விட உயிருள்ளவர்கள் தான் புதிய ஆடைகளுக்கு அதிக உரிமை படைத்தவர்களாக உள்ளனர் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். (சீரத்துஸ் ஸஹாபா, தொகுதி 1, பக்கம் 50, தாருல் இஷாஅத் கராச்சி)

புதிய ஆடையை உயிருள்ள ஒருவருக்கு அணிவித்து விடுங்கள். அது சிறந்ததாகும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

தம்மை தமது துணைவியார் ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் நீராட்ட வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் புதல்வர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் அன்னாருக்கு உதவி செய்தார்கள். அன்னாரின் கஃபன் இரண்டு ஆடைகளை உள்ளடக்கியிருந்தது. அவற்றில் ஒன்று நீராட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறும் அறிவிப்பில் வருகிறது. அதாவது, மூன்று ஆடைகளில் கஃப்ன் அணிவிக்கப்பட்டது. பின்னர் அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டிலில் வைக்கப்பட்டார்கள். அந்தக் கட்டிலில் தான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உறங்கி வந்தார்கள். அந்தக் கட்டிலில் தான் அன்னாரின் ஜனாஸா தூக்கிக் கொண்டு செல்லப்பட்டது. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கப்ர் மற்றும் மேடைக்கு மத்தியில் அன்னாரின் ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். இரவு நேரத்தில், அதே அறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கப்ருடன் அன்னார் (ரலி) நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களின் தலை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோள்பட்டைக்கு எதிரில் வைக்கப்பட்டது. (முஸ்தத்ரக் ஹாகிம், பாகம் 3, பக்கம் 66, ஹதீஸ் எண் 4409, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

நல்லடக்கத்தின் நேரத்தில், ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கப்ரில் இறங்கினார்கள். மேலும் நல்லடக்கம் செய்தார்கள்.

இப்னு ஷஹாப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவு நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நல்லடக்கம் செய்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 3, பக்கம் 156, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990)

ஹஸ்ரத் ஸாலிம் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து இந்தக் கூற்றை அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் ரலி அவர்களின் மரணத்திற்கான காரணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் துக்கமாக இருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, தொடர்ச்சியாக அன்னார் பலவீனம் அடைந்து கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ரலி) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். (முஸ்தத்ரக் ஹாகிம், பாகம் 3, பக்கம் 66, ஹதீஸ் எண்-4410, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2002)

ஒரு யூதர் விஷம் கலந்து கொடுத்த உணவே அன்னாரின் மரணத்திற்கு காரணியாக இருந்தது என்றும், வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடிய சில கட்டுரையாளர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், பொதுவாக, இந்த அறிவிப்பை வாழ்க்கை வரலாற்றை எழுதும் கட்டுரையாளர்கள் மறுத்தும் உள்ளனர். (உமர் அபூந் நஸ்ர் அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்- ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்கள், பக்கம்-726, முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணநேரம் நெருங்கியபோது, இது என்ன நாள்? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். திங்கட்கிழமை என்று மக்கள் கூறினர். இன்று நான் மரணமடைந்துவிட்டால் நாளை வரை காத்திருக்க வேண்டாம். ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் அந்த பகல் அல்லது இரவு எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (முஸன்னத் அஹ்மது பின் ஹன்பல் தொகுதி 1, பக்கம் 88, முஸன்னத் அபீ பக்ர் அஸ்ஸித்தீக், ஹதீஸ் எண்-45, ஆலமுல் குதுப் பெய்ரூத் 1998)

அதாவது, நல்லடக்கம் அங்கு நடைபெற்றுவிட்டால் அது மிகச் சிறந்ததாகும்.

எனக்குப் பிறகு எனது சொத்துகள் திருக்குர்ஆன் கட்டளைக்கேற்ப பங்கிடப்பட வேண்டும் என்று தாம் விட்டுச் செல்லும் சொத்துகளைக் குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (முஹம்மது இல்யாஸ் ஆதில் அவர்கள் எழுதிய நூல்- ஸீரத் குலஃபாயே ராஷிதீன், பக்கம் 152, முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்)

இதேபோன்று மற்றோர் அறிவிப்பிலும் இவ்வாறு வருகிறது:

அன்னார் (ரலி) அவர்கள், தாம் விட்டுச் செல்லும் சொத்துகளில் வாரிசு அல்லாத உறவினர்களுக்கு, ஐந்தில் ஒரு பங்கிற்கு வஸிய்யத் செய்திருந்தார்கள் (முஹம்மது ஹுஸைன் ஹேகல் எழுதிய நூல்-அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி), பக்கம் 475, இஸ்லாமி குதுப் கானா, லாஹூர்)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் துணைவியர்கள் மற்றும் பிள்ளைகளைக் குறித்து குறிப்பு கிடைக்கின்றது:

அன்னார் (ரலி) அவர்களுக்கு நான்கு மனைவிமார்கள் இருந்தனர். முதல் மனைவி குதைலா பின்த் அப்துல் உஸ்ஸா. அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதைக் குறித்து கருத்து வேறுபாடு உள்ளது. அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) ஆகியோரின் தாயார் ஆவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறியாமைக் காலத்தில் அன்னாருக்கு தலாக் வழங்கியிருந்தார்கள்.

ஒரு முறை மதீனாவில், அன்னார் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களிடம் அதாவது தமது மகளிடத்தில் சிறிது நெய் மற்றும் பாலாடைக் கட்டி போன்றவற்றை அன்பளிப்பாக எடுத்துக் கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அந்த அன்பளிப்பை பெறுவதற்கு மறுத்துவிட்டார்கள். வீட்டினுள் நுழைவதற்கு கூட அன்னாரை அனுமதிக்கவில்லை. மேலும், இது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் விசாரித்துக் கூறுங்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு தகவல் அனுப்பினார்கள். எனது தாய் இவ்வாறு வந்திருக்கின்றார். மேலும், அன்பளிப்பு கொண்டு வந்துள்ளார். நான் அவரை வீட்டில் அனுமதிக்கவில்லை. என்ன வழிகாட்டல்? என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அவரை வீட்டிற்குள் அனுமதியுங்கள். மேலும் அன்னாரின் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே ரூமான் பின்த் ஆமிர் (ரலி) அவர்கள் அன்னாரின் இரண்டாவது மனைவியாவார்கள். அன்னார் பனூ கின்ஆனா பின் ஹுஸைமா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் முதல் கணவரான ஹாரிஸ் பின் ஸன்ஜரா மக்காவில் இறந்துவிட்டார். அதன் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அன்னார் திருமணம் செய்து கொண்டார்கள். அன்னார், ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை தழுவினார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். மேலும், மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். அன்னாரின் வயிற்றில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மனான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோர் பிறந்தனர். ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு மதீனாவில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுயமே அன்னாரின் கப்ரில் இறங்கினார்கள். மேலும் அன்னாரின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள்.

மூன்றாவது மனைவி ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் பின் மஃபத் பின் ஹாரிஸ் ஆவார்கள். அன்னாரின் சுட்டுப் பெயர் உம்மே அப்துல்லாஹ் ஆகும். அன்னார் முஸ்லிம்கள் தாரே அர்கமில் நுழைவதற்கு முன்னரே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்துவிட்டார்கள். அன்னார் துவக்கத்திலேயே ஹிஜ்ரத் செய்யக் கூடியவராக இருந்தார்கள். அன்னார் தமது

கணவர் ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களுடன் முதலில் அபீசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கிருந்து ஹிஜ்ரி 7ஆம் ஆண்டில் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஹிஜ்ரி 8ஆம் ஆண்டில் முஅத்தா போரில் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அன்னாரின் திருமணம் நிகழ்ந்தது. அன்னாரின் வயிற்றில், முஹம்மது பின் அபீ பக்ர் பிறந்தார்.

நான்காவது மனைவி, ஹஸ்ரத் ஹபீபா பின்த் காரிஜா பின் ஸைது பின் அபூ ஸுபைர் ஆவார்கள். அன்னார், அன்சார் கோத்திரத்தின் கிளையான கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவின் புறநகர் பகுதியில் அன்னாருடன் வாழ்ந்து வந்தார்கள். அன்னாரின் வயிற்றிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புதல்வி உம்மே குல்ஸூம் பிறந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு, உம்மே குல்ஸூம் பிறந்தார். பிள்ளைகளில் மூன்று மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். முதலில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலி). ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூத்த மகனாக இருந்தார்கள். அன்னார் (ரலி), ஹுதைபியா உடன்படிக்கை நாளன்று முஸ்லிம் ஆனார்கள். பின்னர், உறுதிப்பாட்டுடன் நிலை நின்றார்கள். அன்னார் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தோழமை கிடைத்திருந்தது. வீரம், துணிச்சலில் அன்னார் (ரலி) அவர்கள் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். இஸ்லாத்தை தழுவிய பிறகு, அன்னாரின் நிலைபாடு மிகவும் போற்றத் தக்கதாக இருந்தது.

இரண்டவாது மகன், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த சந்தர்ப்பத்தில் முக்கிய பங்கு ஆற்றினார்கள். அன்னார் பகல் முழுவதையும் மக்காவில் கழிப்பார்கள். மேலும் மக்காவாசிகளைக் குறித்த செய்தியை சேகரிப்பார்கள். பின்னர் இரவுநேரத்தில் ஒளிந்து குகையை சென்றடைந்து ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கு தகவல் கூறுவார்கள். காலை நேரத்தில் மக்காவிற்கு திரும்பி வந்துவிடுவார்கள். தாயிஃப் போரில் அன்னார் மீது அம்பு பாய்ந்தது. அதன் காயம் குணமாகவில்லை. இறுதியில் அதன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் அன்னார் (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள்.

முஹம்மது பின் அபீ பக்ர் மூன்றாவது மகன் ஆவார். ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் அவர்களின் வயிற்றில் அவர் பிறந்தார். ஹஜ்ஜதுல் விதா சந்தர்ப்பத்தில் துல் ஹல்பியாவில் அவர் பிறந்தார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மடியில் அன்னார் வளர்ந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் அன்னாரை எகிப்தின் கவர்னராக நியமினம் செய்தார்கள். அன்னார் அங்கேயே கொல்லப்பட்டார்கள். சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்தவர்களில் அன்னாரின் பெயரும் குறிப்பிடப்படுகிறது. அதன் காரணமாகவே அன்னார் கொல்லப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பிள்ளைகளில் நான்காவது பிள்ளை ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் ஸாத்துன் நதாகைன் என்ற பெயரால் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளார்கள். அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை விட வயதில் மூத்தவராக இருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு ஸாத்துன் நதாகைன் என்ற சுட்டுப் பெயரை சூட்டினார்கள். ஏனெனில் ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தில் அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் தமது தந்தையாருக்காக உணவுத் தயார் செய்தார்கள். பின்னர் அதனை கட்டுவதற்காக எந்த ஒரு பொருளும் கிடைக்காததால் தமது இடுப்பில் கட்டியிருந்த துணியைக் கிழித்து உணவைக் கட்டிவிட்டார்கள். உணவிற்காக அன்னார் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த உணவை அன்னார் (ரலி) அவர்கள் தமது இடுப்பிலிருந்த துணியால் கட்டி கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களுடன் அன்னாரின் திருமணம் நிகழ்ந்தது. கருவுற்றிருந்த நிலையில் அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஹிஜ்ரத்திற்கு பிறகு, அன்னாரின் வயிற்றில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) அவர்கள் பிறந்தார்கள். ஹிஜ்ரத்திற்கு பிறகு, பிறந்த முதல் குழந்தையாக அன்னார் (ரலி) இருந்தார்கள். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் நூறு வயது வரை வாழ்நாளைப் பெற்றார்கள். அன்னாரின் மரணம் மக்காவில் ஹிஜ்ரி 73ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

ஐந்தாவது பிள்ளை, உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா பின்த் அபீ பக்ர் (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய துணைவியார் ஆவார்கள். அன்னார் (ரலி) அவர்கள், பெண்களில் மாபெரும் அறிஞராக இருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களுக்கு உம்மே அப்தில்லாஹ் என்ற சுட்டுப் பெயரை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு முன்னுதாரணம் மிக்க அன்பு இருந்தது. இமாம் ஷஅபி (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மஸ்ரூக் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து ஏதாவது அறிவிப்பு செய்தால் என்னிடம் சித்தீகா பின்த் சித்தீக் கூறினார்கள் என்று அறிவிப்பார்கள். அன்னார் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவரின் நேசத்திற்குரியவராக திகழ்ந்தார்கள். மேலும், அன்னார் (ரலி) அவர்களின் குற்றமற்றத் தன்மையை அல்லாஹ் திருக்குர்ஆனிலேயே இறக்கியுள்ளான்.

அன்னாரின் மரணம் 63-வது வயதில் ஹிஜ்ரி 57ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னார் (ரலி) அவர்களின் மரணம் ஹிஜ்ரி 58ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

ஆறாவது பிள்ளை, உம்மே குல்ஸூம் பின்த் அபீ பக்ர் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் ஹபீபா பின்த் காரிஜா அன்சாரியா அவர்களின் வயிற்றில் பிறந்தார்கள். மரணத்தின் நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், இவர்கள் இருவரும் உனது சகோதரரும், இரண்டு சகோதரிகளும் ஆவர் என்று கூறினார்கள். அப்போது, எனது சகோதரி அஸ்மா ஆவார். அவரை நான் அறிவேன். ஆனால் எனது இரண்டாவது சகோதரி யார்? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, காரிஜாவின் மகளின் வயிற்றில் இருப்பவர் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதாவது, அவர் அப்போது பிறந்திருக்கவில்லை.

அவர் பிறக்க இருக்கின்றார். அவர் மகளாக இருப்பார். அன்னாருக்கு மகள் பிறப்பார் என்ற விஷயம் எனது உள்ளத்தில் ஆட்கொண்டுவிட்டது. ஆக, பின்னர் அவ்வாறே நிகழ்ந்தது. அன்னார் ஒட்டகப் போரில் ஷஹீதானார்கள்.

(டாக்டர் ஸலாபியின் மொழியாக்க நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள், பக்கம் 48-52, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட், முஸஃபர் கட் மாவட்டம், பாகிஸ்தான்)

(அஸாபா தொகுதி 8, பக்கம் 392, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

சில அறிவிப்புகளுக்கேற்ப, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு மகளின் திருமணம் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுடன் நிகழ்ந்திருந்தது. இந்த மகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நான்கு மனைவிமார்களில், ஒரு மனைவியின் முந்தைய கணவருக்கு பிறந்த மகளாக இருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

(உமர் அபூ அந் நஸ்ர் மொழியாக்கம் செய்த நூல்-ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர், பக்கம் 647, முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்)

அரசாங்க அமைப்பைக் குறித்து, அதாவது அன்னார் (ரலி) அவர்கள் எவ்வாறு அரசாங்க அமைப்பை நடத்தி வந்தார்கள்? என்பது பற்றி எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஒரு விவகாரத்தை எதிர்கொள்ள நேரிட்டால், அன்னார் (ரலி) அவர்களுக்கு

ஆலோசனைக்கான அவசியம் ஏற்பட்டால், அறிவு படைத்த மக்களின் கருத்திற்கான தேவை ஏற்பட்டால், மார்க்க அறிஞர்களுடன் ஆலோசனை பெற விரும்பினால், பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்சார் சஹாபிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அபீ பின் கஆப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஸாலிஸ் (ரலி) ஆகியோரையும் அழைப்பார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2, பக்கம் 267, தாருல் குதுபில் இல்மியா, பெய்ருத் 2012)

அல்லது சிலநேரம் அதிக எண்ணிக்கையில் முஹாஜிர்கள் மற்றும் அன்சார் சஹாபிகளை ஒன்று கூட்டி கருத்துக் கேட்பார்கள்.

شَاوِرْهُمْ (மேலும், முக்கிய விஷயங்களில் நீர் அவர்களிடம் கலந்தாலோசனை செய்வீராக. (3:160)) என்ற வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

இந்த ஒரு சொல்லை சிந்தித்துப் பாருங்கள். இங்கு ஆலோசனை கேட்பவர் ஒருவர் ஆவார். இருவர் கூட கிடையாது என்பதும், எவர்களிடமிருந்து ஆலோசனை பெறப்படுகிறதோ அவர்கள் மூவர் அல்லது மூவருக்கும் அதிகமானவர்கள் என்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது. பின்னர், அவர் அந்த ஆலோசனையை சிந்தித்துப் பார்க்கட்டும். பின்னர் فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى (3:160) என்று கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, எந்த விஷயத்தில் உறுதியான முடிவு எடுக்கப்படுமோ, அதனை நிறைவேற்றுங்கள். வேறு எவரையும் பொருட்படுத்த வேண்டாம். அதாவது, ஆலோசனை கேட்பவர் ஆலோசனை கேட்கட்டும். அதன் பிறகு, ஆலோசனை பெற்ற பிறகு, எல்லாவற்றையும் ஆராய்ந்து அதன் படி அமல் செய்யட்டும். பின்னர் எவரையும் பொருட்படுத்த வேண்டாம்.

அன்னார் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் இந்த உறுதியான முடிவிற்கு மிகவும் தெளிவான உதாரணம் கிடைக்கின்றது. மக்கள் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டபோது, உஸாமா (ரலி) அவர்களின் தலைமையில் செல்லவிருந்த அந்தப் படையை தாங்கள் தடுத்து நிறுத்துங்கள் என்று அன்னாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், எந்தப் படையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனுப்பினார்களோ அதனை என்னால் திரும்ப பெற முடியாது. அபூகஹாஃபாவின் மகனுக்கு (அதனை திரும்ப பெறுவதற்கு) அவ்வாறு செய்வதற்கு ஆற்றல் இல்லை. என்று அன்னார் (ரலி) அவர்கள் பதில் அளித்தார்கள். பின்னர், சிலரை மட்டும் தம்முடன் வைத்துக் கொண்டார்கள். அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் படையில் செல்ல இருந்தார்கள். அன்னாரை தடுத்து நிறுத்திக் கொண்டார்கள்.

அடுத்து, மக்கள் முர்தத் ஆகுவதிலிருந்து தடுப்பதற்காக ஸகாத்தை மன்னித்து விடுங்கள் என்று ஸகாத் தொடர்பாக கூறப்பட்டது. அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒட்டகத்தை கட்டக் கூடிய ஒரு கயிறை ஸகாதாக அவர்கள் கொடுத்து வந்தார்கள் என்றால், நான் அதனையும் அவர்களிடமிருந்து வாங்குவேன். நீங்கள் அனைவரும் என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டாலும் சரியே, முர்தத்களுடன் காட்டு விலங்குகளும் இணைந்து கொண்டாலும் சரியே, நான் தனியாக அவர்கள் அனைவருக்கும் எதிராக போர் புரிவேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

இதுவே உறுதியான முடிவின் முன்னுதாரணம் ஆகும். பின்னர் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள் . ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உறுதியான எண்ணம் இதுவாக இருந்தது. மக்களின் ஆலோசனை வேறொன்றாக இருந்தது. ஆனால், என்ன நடந்தது? அன்னார் (ரலி) அவர்கள் எந்த உறுதியான எண்ணத்தை வெளிப்படுத்தினார்களோ, அல்லாஹ் அன்னாரின் அந்த உறுதியான எண்ணத்தின் காரணமாக வெற்றிகளின் வாசல்களை திறந்துகொடுத்தான். நினைவிற் கொள்ளுங்கள்! மனிதன் இறைவனுக்கு அஞ்சுகின்றபோது, பின்னர் படைப்பினங்களின் மீதான மதிப்பச்சம் அவனது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

(மன்ஸபே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 2, பக்கம் 58)

இதுவே கிலாஃபத் பதவியின் உண்மைத்துவம் ஆகும்.

**பைத்துல் மால் அமைப்பை நிறுவுதல்:** இறைத் தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்தில், போர் செல்வங்கள், கும்ஸ், ஃபே, ஸகாத், போன்றவற்றின் கீழ் வந்த செல்வங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உடனடியாக எல்லாருக்கும் முன்னால் பள்ளிவாசலில் அமர்ந்து கொண்டு பங்கிட்டு கொடுத்து வந்தார்கள். இந்த வடிவில்,பைத்துல் மால் துறை நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அமைந்திருந்தது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் வெற்றிகளின் காரணமாக, மற்ற செல்வங்கள் தவிர, போர் செல்வங்களும், ஜிஸ்யா வரியின் வருவாயும் அதிகமாக வரத் தொடங்கியது. அவை அதிகரித்து விட்டன. பங்கீடு செய்யும் வரையிலும், செலவு செய்யும் வரையிலும் செல்வத்தை அங்கு வைப்பதற்கு ஏதுவாக ஒரு பைத்துல் மால் அமைப்பை நிறுவதற்கான தேவையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உணர்ந்தார்கள். எனவே, அன்னார், பெரும் சஹாபிகளிடம் ஆலோசனை செய்து ஒரு வீட்டை அதற்காக தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அந்த பைத்துல் மால் வெறும் பெயரளவிலேயே இருந்தது. ஏனெனில், ரொக்கம் மற்றும் தொகை வந்தவுடனேயே அவற்றை பங்கிட்டு கொடுத்துவிட வேண்டும் என்பதே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முயற்சியாக இருந்து வந்தது.

சில அறிவிப்புகளுக்கேற்ப, நிதித் துறையின் பொறுப்பு, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (பஷீர் ஸாஜித் அவர்களின் நூல்-அஷர முபஷ்ஷிரா, பக்கம்-181, அல்பத்ர் பப்ளிகேஷன்ஸ் லாஹூர் 2000)

தொடக்கத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸுங் பள்ளத்தாக்கில் பைத்துல் மாலை உருவாக்கியிருந்தார்கள். அதற்காக, எந்த பாதுகாவலரையும் நியமிக்கவில்லை. ஸுங் என்பது மதீனாவின் புறநகர் பகுதியில், மஸ்ஜித் நபவியில் இருந்து சுமார் 2மைல் தொலைவில் உள்ள ஓர் இடம் ஆகும். ஒருமுறை, தாங்கள் பைத்துல் மாலிற்கு ஒரு பாதுகாவலரை ஏன் நியமிப்பதில்லை? என்று ஒருவர் கேட்டார். அதற்கு, அதனை பாதுகாப்பதற்கு ஒரு பூட்டு போதுமானதாகும் என்று அன்னார் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். அதாவது, பூட்டு போடப்பட்டுள்ளது. அது போதுமானதாகும். ஏனெனில், பைத்துல் மாலில் சேமிக்கப்பட்ட செல்வங்கள் அனைத்தையும், அன்னார் (ரலி) அவர்கள் பங்கிட்டு கொடுத்து வந்தார்கள். பெரும்பாலும், அது காலியாகவே இருந்து வந்தது. எந்த அளவுக்கு என்றால் அது முற்றிலும் காலியாகிவிட்டது. பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு இடம்பெயர்ந்துவிட்டபோது பைத்துல்மாலை தமது வீட்டிலேயே மாற்றிவிட்டார்கள்.

அன்னாரின் வழிமுறை இவ்வாறு


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இருந்து வந்தது. அதாவது, பைத்துல் மாலில் இருந்து வந்த செல்வத்தை மக்களுக்கு பங்கிட்டு கொடுத்து வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அவை காலியாகிவிடும். அன்னார் பங்கிட்டுக் கொடுக்கும்போது ஒவ்வொருவருக்கும் சமமாக கொடுத்து வந்தார்கள். அதே செல்வத்திலிருந்து அன்னார்(ரலி), ஒட்டகம், குதிரை, மற்றும் ஆயுதங்களை வாங்கி அல்லாஹ்வின் வழியில் பங்கீடு செய்து வந்தார்கள்.

ஒருமுறை அன்னார (ரலி) அவர்கள் காட்டரபிகளிடம் இருந்து போர்வைகளை விலைக்கு வாங்கி மதீனாவின் விதவைகளுக்கு பங்கிட்டு கொடுத்தார்கள். (அல்லாமா சூயூத்தி அவர்களின் நூல்-தாரீகுல் குலஃபா, பக்கம் 63-64, தாருல் கிதாபுல் அரபி பெய்ரூத் 1999)

அன்னார் (ரலி) அவர்கள் பலமுறை பங்கிட்டு கொடுத்திருப்பார்கள். ஆனால், எவ்வாறு இருப்பினும் இந்த குறிப்பு அறிவிப்பில் ஒருமுறையே பதியப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்காக பைத்துல்மால் செல்வத்திலிருந்து உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அன்னாரின் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும் பைத்துல் மால் செல்வத்திலிருந்தே உதவித் தொகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது குடும்பத்தினருக்கு உணவிற்கான ஏற்பாடு செய்யும் அளவிற்கு எனது தொழில் இருந்தது என்பது எனது சமுதாயத்திற்கு தெரியும். அதாவது, எனது குடும்பத்தை எளிதாக நடத்தும் அளவிற்கு எனது வருமானம் இருந்தது. ஆனால், தற்போது நான் முஸ்லிம்களின் பணிகளில் மும்முரமாகிவிட்டேன். எனவே, அபூபக்ரின் குடும்பத்தினர் தற்போது பைத்துல்மால் செல்வத்திலிருந்து உணவு உண்பார்கள். மேலும் அவர், அதாவது அபூபக்ர் முஸ்லிம்களுக்காக அந்த செல்வத்தில் வியாபாரம் செய்வார். மேலும், வியாபாரம் மூலமாக அந்த செல்வத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பார்.

(ஸஹீஹ் அல் புகாரி, பாடம்-வியாபாரம், ஹதீஸ் எண்: 2070)

ஆக, முஸ்லிம்கள் அன்னாருக்காக வருடத்திற்கு ஆறாயிரம் திர்ஹம் உதவித் தொகையை நிர்ணயித்தார்கள். சிலர் கூறுகின்றனர்: தமது தேவைக்கு என்ன தொகை போதுமானதாக இருந்ததோ அவற்றிற்கே அன்னார் (ரலி) அவர்கள் ஒப்புதல் வழங்கியிருந்தார்கள். அன்னார் முதல் ஆட்சியாளராக இருந்தார்கள். அதாவது, அன்னார் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் செலவீனங்களுக்கு அதன் குடிமக்கள் ஒப்புதல் வழங்கியிருந்தார்கள். (அல் காமில் ஃபித்தாரீக் லி இப்னி அஸீர், தொகுதி 2, பக்கம் 272, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2006)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆக்கப்பட்டபோது, ஒரு நாள் காலை அன்னார் (ரலி) அவர்கள் கடைவீதியின் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். அன்னாரின் தோள்களில், அன்னார் விற்றுவந்த துணிகள் இருந்தன. அன்னார் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களும் சந்தித்தார்கள்.

அல்லாஹ்வின் தூதரின் கலீஃபா அவர்களே! எங்கே செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்கள்? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு, கடை வீதிக்கு செல்கிறேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, தாங்கள் ஏன் இப்படி செய்கின்றீர்கள்? தாங்கள் முஸ்லிம்களின் விவகாரங்களுக்கு பொறுப்பாளராக இருக்கின்றீர்களே! என்று அவர்கள் கூறினர்.

நான் எனது குடும்பத்தினருக்கு எப்படி உணவளிப்பேன்? என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே, நாங்கள் உங்களின் பங்கை நிர்ணயிக்கின்றோம் என்று கூறியவாறு அன்னார் (ரலி) அவர்களை தம்முடன் அவர்கள் அழைத்து சென்றனர்.

(அத்தபகாதுல் குப்ரா தொகுதி 3, பக்கம்-137, அபூபக்ர் அஸ்ஸித்தீக், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

ஆக, வருடத்திற்கு மூவாயிரம் திர்ஹம் உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டது. சில அறிவிப்புகளுக்கு ஏற்ப முன்னரே கூறப்பட்டதுபோன்று, ஆறாயிரம் திர்ஹம் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், சில அறிவிப்புகளுக்கேற்ப ஒட்டுமொத்த கிலாஃபத் காலத்திலும் ஆறாயிரம் திர்ஹம் வழங்கப்பட்டது. இதேபோன்று, ஸீரத் நூல்களில் இதில் ஏறக்குறைய அனைவரும் ஒன்றுபட்டு இருப்பது தெரிய வருகிறது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பைத்துல் மாலிலிருந்து, தமது மற்றும் தமது குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தொகையை பெற்றுக் கொண்டார்கள். ஆனால், மரண நேரத்தில் அனைத்து தொகையையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

அது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகிறது. அன்னார் (ரலி) அவர்களின் மரணநேரம் நெருங்கியபோது, அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு வஸிய்யத் செய்தார்கள்: அதாவது, தமது நிலத்தை விற்பனை செய்து அந்த தொகையிலிருந்து தான் பைத்துல் மாலிலிருந்து சொந்த செலவீனங்களுக்காக பெற்ற தொகையை கொடுத்துவிட வேண்டும். (அல் காமில் ஃபித் தாரீக் லி இப்னி அஸீர், தொகுதி 2, பக்கம்-272, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006) (அத்தபகாதுல் குப்ரா தொகுதி 3, பக்கம் 143, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1990)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணநேரம் நெருங்கியபோது, அன்னார் (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நாம் கலீஃபா ஆனது முதல் சமுதாயத்தின் எந்த தீனாரிலிருந்தும் திர்ஹமிலிருந்தும் உண்ணவில்லை. மாறாக, சாதாரண உணவை உண்டும், எளிய ஆடையை அணிந்தும் வந்தேன். மேலும், முஸ்லிம்களின் போர் செல்வங்களில் அடிமை, ஒட்டகம் மற்றும் போர்வை ஆகிய பொருட்கள் மட்டுமே உள்ளன. எனவே, நான் மரணித்த பிறகு அந்த அனைத்து பொருட்களையும் உமரிடம் அனுப்பி வைத்துவிடவும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது, நான் அந்தப் பொருட்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் பொருட்களை பார்த்துவிட்டு அழுதார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னாரின் கண்ணீர் துளிகள் தரையில் விழத் தொடங்கின. மேலும், அல்லாஹ்வே! அபூபக்ரின் மீது கருணை செய்வாயாக. அன்னார் தமக்கு பிறகு, மக்களை கடினத்தில் ஆழ்த்திவிட்டார்கள் என்றே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

(அல்காமில் ஃபித் தாரீக் லி இப்னி அஸீர், தொகுதி 2, பக்கம்-271, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில சஹாபிகளை அழைத்துக் கொண்டு பைத்துல்மாலை ஆய்வு செய்தார்கள். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அதில் எந்தப் பொருளும் கிடைக்கவில்லை. தர்ஹமும் கிடைக்கவில்லை. தீனாரும் கிடைக்கவில்லை.

(அல்லாமா சூயூத்தி அவர்களின் நூல்-தாரீகுல் குலஃபா, பக்கம் 64, தாருல் கிதாபில் அரபி பெய்ரூத் 1999)

எதுவுமே அதில் இருக்கவில்லை. காலியாக இருந்தது. அனைத்தையும் பங்கிட்டு கொடுத்திருந்தார்கள்.

நீதித் துறையின் அமைப்பையும் அன்னார் (ரலி) அவர்கள் நிறுவியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நீதித் துறை முறையாக ஒழுங்குபடுத்தப்-பட்டிருக்கவில்லை. அன்னார் (ரலி) அவர்கள், நீதித் துறையை ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். (அபூ அந் நஸ்ர் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்த நூல்-ஸய்யிதுனா ஸித்தீக் அக்பர்-பக்கம் 699)

ஓர் அறிவிப்பில் குறிப்பு வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது, நான் தங்களின் சார்பாக நீதிமன்றத்தின் தொண்டுகளை நிறைவேற்றுவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஓராண்டு வரை காத்திருந்தார்கள். ஆனால், அந்தக் காலத்தில் எந்த இரு நபர்களும் அன்னாரிடம் வழக்குகளை எடுத்துக் கொண்டு வரவில்லை. (தாரீகத் தபரி தொகுதி 2, பக்கம் 351, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

எந்த சண்டை சச்சரவும் நடக்கவேயில்லை. எந்த விவகாரமும் உருவாகவில்லை. வழக்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஒரு வழக்கு வந்துவிட்டாலும் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதற்காக சுயமே நேரம் கொடுத்து வந்தார்கள். அன்னார் சுயமே அந்த வழக்குகளை தீர்த்து வைத்து வந்தார்கள். நீதித் துறையின் தலைவராக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னாரின் உதவிக்காக கீழ் கண்ட சஹாபிகள் நியமிக்கப்பட்டு இருந்தனர்:

ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அபீ பின் கஆப் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) ஆகியோர் இருந்தனர். (அபூ அந் நஸ்ர் அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்-ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி), பக்கம் 699-700)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அந்த நேரத்தில் அமைதி மற்றும் நேர்மையின் நிலைமை இவ்வாறு இருந்தது. அதாவது, பல மாதங்கள் கழிந்த பின்னரும் தீர்ப்பிற்காக இரண்டு நபர் கூட என்னிடம் வந்தது கிடையாது. (அத் தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத் பாகம் 3, பக்கம் 137, அபூபக்ர் அஸ்ஸித்தீக் தாருல் குதுபில் இல்மியா. பெய்ரூத் 2012)

ஃபத்வாத் துறை தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. புதுப்புது கோத்திரங்களும், நகரங்களும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டிருந்தன. சூழ்நிலையின் அடிப்படையில் புதுப்புது மார்க்க சட்ட விவகாரங்களும் உருவாகிக் கொண்டிருந்தன. எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சாதாரண முஸ்லிமகளின் வசதி மற்றும் வழிகாட்டலுக்காக ஃபத்வாத் துறையை நிறுவினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அபீ பின் கஆப் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) ஆகியோரை ஃபத்வா கொடுப்பதற்காக நியமித்திருந்தார்கள். ஏனெனில், இந்த சான்றோர்கள் தஃபக்கூ ஃபித் தீன் (மார்க்க ஞானம்), அறிவு மற்றும் புரிதலில் மற்றவர்களை விட தனித் தன்மைக் கொண்டவர்களாக இருந்தனர்.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்களும் ஃபத்வா வழங்கக் கூடிய அந்த சஹாபிகளில் ஒருவராக இருந்தார்கள். இந்த சஹாபிகளைத் தவிர்த்து வேறு எவருக்கும் ஃபத்வா வழங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. (பஷீர் ஸாஜித் அவர்களின் நூல்-அஷர முபஷ்ஷிரா, பக்கம் 182-அல்பத்ர் பப்ளிகேஷன்ஸ் லாஹூர், 2000) (அபூ அந் நஸ்ர் அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்-ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர்(ரலி), பக்கம் 699-700)

ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார். கடிதம் எழுதுகின்ற துறை ஒன்று இருந்தது. அது குறித்து எழுதுபவர் இவ்வாறு எழுதுகின்றார்: நவீன காலத்தின் சொல் வழக்கில், அந்த எழுத்தாளரை அரசாங்கத்தின் செயலாளர் என்று கூறவேண்டும். அதாவது, விவகாரங்களை கவனத்தில் எடுக்கும் செயலாளர் ஆவார். கூட்டங்களின் மினிட்ஸ் (minutes) வாசிப்பவர் ஆவார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நிஸாமே தீவான் என்ற இந்த அமைப்பு நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆயினும், அரசாங்க அதிகாரிகளின் கடிதங்களை எழுதுவதற்கும். உடன்படிக்கைகளை வடிவமைப்பதற்கும், மற்ற எழுத்து பணிகளை மேற்கொள்வதற்கும் சில சான்றோர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எழுத்துப் பணிகளை மேற்கொள்ளும் தொண்டுகளில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ராகிம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே நியமிக்கப்பட்டிருந்தார்கள். எனவே, ஸித்தீக் (ரலி) அவர்களின் காலத்திலும் அன்னாரிடம் இந்த தொண்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. (புரஃபஸர் அலி முஹ்ஸின் ஸித்தீகி அவர்களின் நூல்-அஸ்ஸித்தீக், கார்தாஸ் கராச்சி 2002)

ஓர் அறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்கள் கடிதம் எழுதும் துறையின் பொறுப்பை ஏற்றிருந்தார்கள். சிலநேரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் இருந்த ஹஸ்ரத் அலி (ரலி) அல்லது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) போன்ற ஏனைய சஹாபிகளும் அந்த பொறுப்பை நிறைவேற்றி வந்தார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் நூல்-அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி), பக்கம்-162, பதிப்பு தாரே இப்னி கஸீர் தமஷ்க் பெய்ரூத், 2003)

அடுத்து, ராணுவத் துறை ஆகும். அது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் முறையாக எந்தவொரு ராணுவ அமைப்பும் இருக்கவில்லை. ஜிஹாதிற்கான நேரத்தில், ஒவ்வொரு முஸ்லிமும் முஜாஹித் (போராளி) ஆகிவிடுவார். கோத்திரங்களுக்கேற்ப படை பங்கிடப்பட்டு வந்தது. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தனியாக, தனியாக அமீர் இருந்து வந்தார். அவர்கள் அனைவர் மீதும் அமீருல் உம்ரா (தலைமை படைத் தளபதி) என்ற ஒரு பொறுப்பு இருந்து வந்தது. அது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கண்டுபிடிப்பாக இருந்தது.

(அபூ அந் நஸ்ர் அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்-ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி), பக்கம்-701)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போர் தளவாடங்கள் கிடைப்பதற்கு இந்த ஏற்பாட்டை செய்திருந்தார்கள். அதாவது, பல்வேறு வழிமுறைகள் மூலமாக கிடைத்து வந்த வருமானத்திலிருந்து பொருத்தமான ஒரு பகுதியை ராணுவ பயன்பாட்டிற்காக தனியாக எடுத்து வைக்கப்பட்டது. அதிலிருந்து ஆயுதங்களும், சுமை சுமக்கும் விலங்குகளும் வாங்கப்பட்டன. மேலும், ஜிஹாதிற்கான ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளின் பராமரிப்பிற்காக சில மேய்ச்சல் நிலங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தன.

(அல்லாமா முஹம்மது ஷுஅபை ஜிஸ்தி அவர்களின் நூல்- கமான்டர் சஹாபா, பக்கம் 87-88, பதிப்பு மும்தாஸ் அகாடமி உருது பாஸார், லாஹூர்)

ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ராணுவ அரசாங்கத்தின் அமைப்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கும் முன்பான அரபு கோத்திரங்களில் நடைமுறையில் இருந்த காட்டரபி நடைமுறைக்கு மிக அதிக நெருக்கம் கொண்டதாக இருந்தது. அந்நேரத்தில் அரசாங்கத்திடம் முறையான எந்த ஒரு படையும் இருக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு நபரும் சுயமே போர் தொண்டுகள் ஆற்றுவதற்கு தன்னை முன்நிறுத்தி வந்தார். போருக்கான அறிவிப்பு செய்யப்பட்டால், கோத்திரங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிடும். மேலும் எதிரியை நோக்கி புறப்பட்டு சென்றுவிடுவர். போக்குவரத்து சாமான்கள் மற்றும் ஆயுதங்களுக்காக கோத்திரங்கள் தலைமையக அரசாங்கத்தை எதிர்பார்ப்பதில்லை. மாறாக, தாங்கள் சுயமாகவே அந்தப் பொருட்களுக்கான ஏற்பாட்டை செய்து வந்தார்கள். அரசாங்கத்தின் சார்பாக அவர்களுக்கு ஊதியம் கூட கொடுக்கப்பட்டதில்லை. மாறாக, போர் செல்வங்களையே அவர்கள் தமது தொண்டிற்கான உரிமையாக கருதி வந்தனர். போர் மைதானத்தில் கிடைத்து வந்த போர் செல்வங்களில், 4/5 பங்கு போரில் பங்கு பெறக்கூடியவர்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுக்கப்பட்டு வந்தது. ஐந்தில் ஒரு பங்கு கலீஃபாவிற்கு தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. அதனை அவர் பைத்துல் மால் அமைப்பில் சேர்த்து வைத்து விடுவார்.

கும்ஸ் மூலமாக அரசாங்கத்தின் சாதாரண செலவீனங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வந்தன.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்- அபூபக்ர் அஸ்ஸித்தீக், பக்கம் 456-457, பதிப்பு இஸ்லாமி குதுப் கானா லாஹூர்)

போர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அமீருல் உம்ரா என்ற போர் படைத் தளபதிகளை நியமித்து வந்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போர் தொடர்பாக வழங்கி வந்த வழிகாட்டல்களைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போர்களில் செல்லக்கூடிய போர் வீரர்களுக்கும், படைத் தளபதிகளுக்கும் வழிகாட்டல்கள் வழங்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை நோக்கி உரையாடியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களுக்கு பத்து விஷயங்களுக்கான அறிவுரையை வழங்குகிறேன்.

நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். போர் செல்வங்களை திருடாதீர்கள். நீங்கள் உடன்படிக்கையை மீறாதீர்கள். முஸ்லா எனும் எதிரியின் சடலத்தை சிதைக்கும் வேலையை செய்யாதீர்கள்.

எந்த ஒரு சிறுவயது பிள்ளையையும் கொலை செய்யாதீர்கள். முதியவரையும் கொல்லாதீர்கள். அதேபோன்று பெண்களையும் கொலை செய்யாதீர். மேலும் பேரீத்தம் பழ மரத்தையும் வெட்டவும் கூடாது. எரிக்கவும் கூடாது. உணவுக்காக தவிர, கனி தரும் எந்தவொரு மரத்தையும் வெட்டக்கூடாது. நீங்கள் எந்தவொரு ஆடு, பசுமாடு, ஒட்டகத்தையும் அறுக்கக் கூடாது. தேவை ஏற்பட்டால் செய்து கொள்ளுங்கள். தங்களை தேவாலயங்களுக்காக அர்பணித்து வைத்திருக்கும் மக்களை நீங்கள் கடந்து செல்வீர்கள். எனவே, நீங்கள் அவர்களை அவர்களின் நிலைகளில் விட்டுவிடுங்கள். பாதிரிகளாகிய அவர்களை எதுவும் கூறவேண்டாம். மேலும், பல்வேறு வகைப்பட்ட உணவுகளை உங்களுக்கு பாத்திரங்களில் கொடுக்கும் மக்களை நீங்கள் கடந்து செல்வீர்கள். நீங்கள் அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறி அதனை உண்டு கொள்ளுங்கள். மேலும், தங்களது தலையை நடுவிலிருந்து வழித்துக் கொண்டு, நாலா புறமும் முடியை விட்டு வைத்திருக்கும் மக்களை நீங்கள் சந்திப்பீர்கள். அப்போது, நீங்கள் வாள்களால் அவர்களை கவனித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அந்த மக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடக் கூடியவர்களும், போர் புரியக் கூடிய மக்களும் ஆவர். அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்பட்டு விடுங்கள். அல்லாஹ் உங்களை எல்லா வகையான காயங்களிலிருந்தும், எல்லா வகையான நோய்களிலிருந்தும், பிளேக்கிலிருந்தும் பாதுகாப்பானாக.

(தாரீகுத் தபரி லிஅபீ ஜஃபர் முஹம்மது பின் ஜரீர் தபரி, தொகுதி 2, பக்கம் 246, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

அதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்களை சிரியா போருக்காக அனுப்பி வைத்தவாறு கூறினார்கள். இதைக் குறித்து முந்தைய குத்பாக்களில் நான் குறிப்பிட்டுள்ளேன். சில முக்கிய விஷயங்களின் சுருக்கத்தை மீண்டும் நான் எடுத்துரைத்துவிடுகிறேன்.

**இவை மிகவும் அவசியமான விஷயங்கள் ஆகும்.** நினைவிற் கொள்ளத் தக்கதாகும். ஒவ்வொரு பொறுப்பாளரும் நினைவிற் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

உங்களை சோதித்துப் பார்ப்பதற்காகவும், உங்களுக்கு அனுபவத்தை வழங்குவதற்காகவும், உங்களை வெளியேற்றி உங்களுக்கு தர்பியத் வழங்குவதற்காகவும் நான் உங்களை ஆளுநராக நியமனம் செய்துள்ளேன். நீங்கள் உங்கள் கடமைகளை அழகிய முறையிலும் சிறப்பாகவும் நிறைவேற்றினால், நான் உங்களை மீண்டும் பணியில் அமர்த்துவேன். மேலும், உங்களுக்கு முன்னேற்றத்தை வழங்குவேன். நீங்கள் கவனக்குறைவாக நடந்தால் பின்னர் நான் உங்களை பணி நீக்கம் செய்துவிடுவேன். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை கடமையாக்கிக் கொள்ளுங்கள். உங்களது புறத்தை பார்ப்பதுபோன்றே அவன் உங்கள் அகத்தை பார்க்கின்றான். அல்லாஹ்வுடனான நட்பிற்கான உரிமையை அதிகமாக வழங்குபவரே மக்களில் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார். எவர் தமது அமல்களால் இறைவனது நெருக்கத்தை பெறுவாரோ அவரே மக்களில் அல்லாஹ்விற்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார்.

பின்னர், கூறினார்கள்: அறிவீனமான பகைமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்விற்கு இவ்விஷயங்கள் மிகவும் வெறுப்பிற்குரியவை ஆகும். பின்னர், கூறினார்கள்: உமது படையினருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு நன்மையை விரும்புங்கள். அவர்களுக்கு அறிவுரை வழங்கும்போது **சுருக்கமாக அறிவுரை வழங்குங்கள். ஏனெனில், அதிகமான உரையாடல்கள் ஏராளமான விஷயங்களை மறக்கடித்து விடுகின்றன. நீங்கள் உங்களது நஃப்ஸை சரியாக வைத்துக் கொள்ளுங்கள். மக்கள் உங்களுக்கு சரியாகிவிடுவார்கள். தலைவர் தம்மை சரியாக வைத்துக் கொள்ளட்டும்.**

பொறுப்பாளர் தமது நிலைமைகளை சரியாக வைத்துக் கொண்டால், மக்கள் சுயமே சீராகிவிடுவார்கள்.

தொழுகைகளை அவற்றின் நேரங்களில் ருகூ மற்றும் ஸஜ்தாவை முழுமை செய்தவாறு நிறைவேற்றுங்கள். தொழுகைகளை நிறைவேற்றுவதை பேணுவது மிகவும் அவசியமாகும்.

அடுத்து, கூறினார்கள்: எதிரியின் தூதுவர் உம்மிடத்தில் வந்தால், அவரை கண்ணியப்படுத்தவும். மரியாதை செய்யவும். அவர்களை மிகக் குறைவான நேரம் உம்மிடத்தில் தங்க வைக்கவும். உங்களிடத்தில் அதிகநேரம் அவர்கள் தங்க வேண்டாம். உமது படையினரிடம் இருந்து மிக விரைவாக புறப்பட்டு சென்று விடட்டும். படையினர் மத்தியில் அதிக நேரம் தங்கியிருக்க வேண்டாம். அவர்கள் படையைக் குறித்து அவர்கள் எதையும் அறிந்து கொள்ளாமல் இருக்க அவர்கள் விரைவாக புறப்பட்டு விடட்டும். அவர்கள் உமது பணிகளைக் குறித்து எதையும் அறிந்து கொள்ளக் கூடாது. மிக சுருக்கமான விஷயங்களை பேசுங்கள்.

கூறினார்கள்: உமது தரப்பு மக்களை அவர்களுடன் பேசுவதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். எல்லாரையும் அவர்களின் தூதுவர்கள் சந்திப்பதற்கு அனுமதிக்க வேண்டாம். அவர்கள் விரும்பும் இடத்திற்கு சென்று கொண்டே இருப்பதும், சந்தித்துக் கொண்டு செல்வதற்கும் அனுமதிக்க வேண்டாம். அவர்கள் யாரை சந்திக்க வேண்டுமோ, யாருடன் பேச வேண்டுமோ அவர்களுடன் மட்டுமே பேச வேண்டும். அவர்கள் பொது மக்களுள் கலந்துவிட வேண்டாம்.

பின்னர், ஆலோசனை தொடர்பாக கூறினார்கள்: நீங்கள் யாரிடமாவது ஆலோசனை பெறவேண்டும் என்றால், உண்மையான விஷயத்தைக் கூறவும். சரியான ஆலோசனை கிடைக்கும். முழு விஷயத்தையும் கூறிய பிறகு ஆலோசனை பெறவும். ஆலோசகரிடம் உங்களது விஷயத்தை மறைக்க வேண்டாம். இல்லையென்றால், உமது காரணமாகவே உமக்கு பாதிப்பு ஏற்படும்.

நாள் முழுவதற்குமான தகவலை பெறுவது தொடர்பாகவும், எவ்வாறு தகவல்களை பெறுவது என்பது தொடர்பாகவும், எவ்வாறு பொறுப்பாளர்கள், தலைவர்கள், தளபதிகள் தகவல்களை அறிந்து கொள்வது என்பது தொடர்பாகவும் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இரவு நேரத்தில் உங்கள் நண்பர்களிடம் பேசுங்கள். மாலை நேரத்தில் அமருங்கள். அவர்களில் நபர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அவர்களிடம் உரையாடுங்கள். உங்களுக்கு தகவல்கள் கிடைத்துவிடும். பெரும்பாலும் தகவல் கொடுக்காமல் திடீரென அவர்களின் முகாம்களில் ஆய்வு நடத்துங்கள். கண்காணிப்பும் அவசியமாகும். தமது பாதுகாப்பு கொடுக்கும் இடத்திலிருந்து எவரை கவனமற்றவராக நீர் காண்பீரோ அவருக்கு நன்றாக தண்டனை வழங்குங்கள்.

பின்னர் கூறினார்கள்:

தண்டனை வழங்குவதில் அவசரமும் காட்டாதீர்கள். முற்றிலும் புறக்கணித்தும் விடாதீர்கள். இரண்டு விஷயங்களும் அவசியமாகும். தண்டனை வழங்குவதிலும், முடிவு எடுப்பதிலும் அவசரம் காட்டாதீர்கள். முற்றிலும் கவனமற்றவராகவும் இருந்து விடாதீர்கள். உமது படையினரைக் குறித்து முற்றிலும் கவனமற்றவராக இருந்துவிட வேண்டாம். அவர்களை உளவு பார்த்து அவர்களை இழிவுபடுத்த வேண்டாம். உமது மக்களை எல்லாநேரமும் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டும், உளவு பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டாம். ஏனெனில், இதன் மூலம் அவர்களுக்கு இழிவு ஏற்படுகின்றது. அவர்களின் இரகசியத்திற்குரிய விஷயங்களை மக்களிடம் கூறவேண்டாம். (அவர்களைக் குறித்து) நீங்கள் அறிந்த இரகசியமான விஷயங்களை வேறு யாரிடமும் கூறவேண்டாம்.

வீணான மக்களுடன் அமராதீர்கள். உண்மையான, நன்றியுணர்வு மிக்க மக்களுடன் அமருங்கள். கோழைகளாக ஆகாதீர்கள். இல்லையென்றால் மக்களும் கோழைகளாக ஆகிவிடுவார்கள். போர் செல்வங்களில் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். அது உங்களை ஏழ்மைக்கு அருகில் கொண்டு சென்றுவிடும். வெற்றி மற்றும் உதவியை தடுத்து நிறுத்திவிடும். (அல் காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 253-254, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2003)

நான் ஏராளமான விஷயங்களை எடுத்துக் கூறியுள்ளேன். அவற்றில் சில விஷயங்களை நான் முன்பும் கூறியுள்ளேன். ராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமின்றி, நமது பொறுப்பாளர்களுக்கும் இவை மிக அவசியமான விஷயங்களாகும். இவற்றை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் பணிகளில் அபிவிருத்தி ஏற்படும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, பொறுப்பாளர்களுக்கு நினைவில் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த சுருக்கத்தை நான் மீண்டும் எடுத்துரைத்து வருகிறேன்.

இஸ்லாமிய அரசாங்கத்தின் பல்வேறு மாநிலங்களில் பிரிப்பது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் இஸ்லாமிய நாடுகள் பல்வேறு மாநிலங்களில் பங்கிடப்பட்டிருந்தன. அந்த மாநிலங்களில் அன்னார் (ரலி) அவர்கள் அமீர்மார்களையும், கவர்னர்களையும் நியமித்தார்கள். அவற்றின் தாருல் கிலாஃபாவாக (தலைநகரமாக) மதீனா இருந்தது. அங்கு கலீஃபா என்ற முறையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் நூல்-அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி), பக்கம்,176,180,181, பதிப்பு தாரே இப்னு கஸீர் திமஷ்க் பெய்ரூத் 2003)

அதிகாரிகளை நியமனம் செய்கின்ற வழிமுறை தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிமுறை இவ்வாறு இருந்தது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையின்படி அன்னார் (ரலி) அவர்கள் செயல்பட்டவாறு ஒரு சமுதாயத்திற்கு கவர்னரை நியமிக்கும்போது, அந்த சமுதாயத்தின் உறுப்பினர்களில் நல்ல, நேர்மையான நபர்கள் இருந்தால் அந்த விஷயத்தைக் கருத்தில் கொண்டவாறு அவர்களில் இருந்தே கவர்னர்களை நியமனம் செய்வார்கள்.

தாயிஃப் மற்றும் ஏனைய சில கோத்திரங்களில் அவர்களில் இருந்தே கவர்னர்களை நியமனம் செய்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஒருவரை கவர்னராக நியமிக்கும்போது, அந்தப் பகுதியில் அவரது கவர்னர் பொறுப்பிற்கான உறுதிமொழியை எழுதி வாங்கிக் கொள்வார்கள். பெரும்பாலான நேரங்களில் அந்தப் பகுதி வரை சென்றடைவதற்கான வழிப்பாதையையும் கூட அவருக்காக நியமித்து விடுவார்கள். அவற்றில், அவர் எந்தப் பகுதிகளை கடந்து செல்ல வேண்டுமோ அவற்றை குறிப்பிட்டுவிடுவார்கள். இன்னும் எந்தப் பகுதிகள் வெற்றிக் கொள்ளப்படாமல் இருந்ததோ, மேலும் எந்தப் பகுதிகள் இஸ்லாமிய கிலாஃபத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியில் இருந்ததோ அந்தப் பகுதிகளைக் குறித்த நியமனம் நடைபெறும்போது குறிப்பாக இவ்வாறு வழிப்பாதைகளை குறிப்பிட்டுவிடுவார்கள்.

சிரியா மற்றும் ஈராக் வெற்றிகளிலும், முர்தத்களுக்கு எதிரான போரின்போதும் இந்த விஷயங்கள் முற்றிலும் தெளிவாக வெளிப்பட்டு வந்தன. சிலநேரம் அன்னார் (ரலி) அவர்கள் சில மாநிலங்களை மற்ற பகுதிகளுடன் இணைத்துவிடுவார்கள். குறிப்பாக, முர்தத்களுடனான போருக்குப் பிறகு இந்த விஷயம் அமலுக்கு வந்தது. அந்த வகையில், ஹஸ்ரத் ஸய்யாது பின் லபீத் (ரலி) அவர்கள் ஹிழ்ர்மௌத் பகுதியின் கவர்னராக இருந்தார்கள். அன்னாரின் கண்காணிப்பின் பொறுப்பில் கிந்தா பகுதியையும் இணைத்துவிட்டார்கள். அதன் பிறகு, அன்னார் (ரலி) ஹிழ்ர் மௌத் மற்றும் கிந்தா ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் கவர்னராக இருந்தார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் நூல்-அபூபக்ர் அஸ்ஸித்தீக் பக்கம் 179, பதிப்பு தாரே இப்னு கஸீர் திமஷ்க் பெய்ரூத் 2003)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் அதிகாரிகளின் தேர்ந்தெடுப்பின்போது, இஸ்லாத்தின் முதன்மையான விஷயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மேலும், நபி (ஸல்) அவர்களின் பயிற்சிமுகாமில் நேரடியாக பயிற்சி பெற்ற நபர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். அதாவது, எவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நேரடியான தோழமை கிடைத்திருந்ததோ அவர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்தார்கள். இதுவே முதல் preference ஆக இருந்தது. முதன்மை முன்னுரிமையாக இருந்தது. இந்த விவகாரத்தில் அன்னார் (ரலி) அவர்களின் அளவுகோல் இவ்வாறு இருந்தது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த நபரை எந்த பணிக்காக நியமனம் செய்திருந்தார்களோ, அன்னார் (ரலி) அவர்கள் ஒருபோதும் அதில் மாற்றங்கள் செய்ததில்லை. உதாரணமாக, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை படைக்கு அமீராக நியமனம் செய்திருந்தார்கள். பிற்காலத்தில், சில மக்கள் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஒரு மூத்த சஹாபியை அந்தப் பொறுப்பில் அமர்த்தும்படி ஆலோசனை கூறினார்கள். ஆனால், அன்னார் (ரலி) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களையே அந்தப் பொறுப்பில் தொடரச் செய்தார்கள்.

அதேபோன்று, எந்த நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அதிக அருட்களைப் பெற்றுள்ளார்? என்பதையும் அன்னார் (ரலி) அவர்கள் கருத்தில் கொண்டு வந்தார்கள். இதன் காரணமாகவே, அன்னார் (ரலி) அவர்கள் பெரும்பாலும் மக்கா வெற்றிக்கு முன்னர் முஸ்லிமாக ஆகியிருந்த மக்களிடமே பல்வேறு பொறுப்புகளை ஒப்படைத்து வந்தார்கள்.

இது தொடர்பாக, அன்னார் (ரலி) அவர்கள் ஒருபோதும் கோத்திர பந்தங்களையோ அல்லது சொந்த பந்தங்களையோ கருத்தில் கொள்ளும் நடைமுறையை மேற்கொள்ளவில்லை. இந்த கடுமையான விதிமுறை மற்றும் உயர்தரமான அளவுகோலின் விளைவாகவே அன்னார் (ரலி) அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்கள் எப்போதும் தமது சிறந்த திறமைகளை இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு தொண்டாற்றுவதற்கு பயன்படுத்தினார்கள். (அபூ அந்நஸ்ர் அவர்களின் நூல்-ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி), பக்கம்-693)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிகாரிகளின் நியமனத்தின்போது, உள்ளூர் வாசிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளித்து வந்தார்கள். அந்த வகையில், ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பஹ்ரைனின் கவர்னராக இருந்தார்கள். பிற்காலத்தில், ஏதோ காரணத்தால் அன்னார் அங்கிருந்து வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில், ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களை எங்களிடம் திருப்பி அனுப்பி வையுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பஹ்ரைன் வாசிகள் விண்ணப்பம் செய்தனர். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்களை பஹ்ரைனின் கவர்னாக ஆக்கி அவர்களிடம் அனுப்பிவிட்டார்கள்.

(ஃபுதூஹூல் பல்தான் லில்பலாஸரி பக்கம்-131, பதிப்பு நஃபீஸ் அகாடமி, கராச்சி)

அதிகாரிகளுக்கும் அன்னார் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். அது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சியாளர்களை நியமனம் செய்யும்போது அன்னார் (ரலி) அவர்கள் சுயமே வழிகாட்டல் வழங்கி வந்தார்கள். அது தொடர்பாக தபரியில் உள்ளது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்களுக்கும் அறிவுரை வழங்கியவாறு அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

**அகத்திலும், புறத்திலும் இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருங்கள். எந்த நபர் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொண்டிருப்பாரோ அவரது விடுதலைக்கான வழியை அவன் உருவாக்கி விடுகின்றான். மேலும், எங்கிருந்து ரிஸ்க் கிடைப்பதற்கு அவர் கற்பனை கூட செய்திருக்க மாட்டோரோ அங்கிருந்து ரிஸ்க் கிடைப்பதற்கு அவன் ஏற்பாடு செய்துவிடுகின்றான். எவர் அல்லாஹ்விற்கு அஞ்சுகின்றாரோ அவரது பாவத்தை அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். மேலும், அல்லாஹ் அவருக்கு அதிகமான நற்கூலியை வழங்குகின்றான். இறைவனின் அடியார்கள் ஒருவர் மற்றவருக்கு அறிவுறுத்தும் எல்லா விஷயங்களை விடவும் மேன்மையானது இறையச்சத்தை மேற்கொள்வதாகும். நீங்கள் இறைவனின் பாதைகளில் ஒரு பாதையில் செல்கின்றீர்கள்.**

**எனவே, எந்த விவகாரம் உங்களது மார்க்கத்திற்கு வலிமையையும், உங்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பிற்கு காரணியாகவும் அமையுமோ அதில் நீங்கள் கவனக் குறைவாக இருப்பது மன்னிக்கப்பட முடியாத குற்றமாகும். எனவே, உங்களிடமிருந்து ஒருபோதும் சோம்பலும், கவனக் குறைவும் வெளிப்படக் கூடாது.**

(தாரீகுத் தபரி: தொகுதி 2, பக்கம்-332, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்தவ்ரித் பின் ஷதாத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் செவியுற்றேன்:

எந்த நபர் நமது அதிகாரியாக இருக்கின்றாரோ அவர் ஒரு மனைவியை வைத்துக் கொள்ளட்டும். மேலும் அவரிடம் தொண்டர் இல்லையென்றால், ஒரு தொண்டரை வைத்துக் கொள்ளட்டும். அவரிடத்தில் தங்குவதற்கு வீடு இல்லையென்றால், ஒரு வீடு வைத்துக் கொள்ளட்டும்.

ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி)அவர்கள் கூறியதாக முஸ்தவ்ரித் இவ்வாறு கூறினார்:

எந்த நபர் இந்தப் பொருட்களை தவிர வேறு எதனையும் வைத்துக் கொள்வாரோ அவர் நம்பிக்கை துரோகி ஆவார்.

அல்லது அவர் திருடர் ஆவார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூத், கிதாபுல் கராஜ் வல் உமராஃ வ அல்ஃபி, ஹதீஸ் எண்: 2945)

**அதிகாரிகள் எவ்வாறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வந்தனர்?**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிகாரிகளின் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து வந்தார்கள். அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தோழமையை பெற்றிருந்தார்கள் என்பதால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மாற்றமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அந்த அதிகாரிகளின் சாதாரண மறதி மற்றும் தவறுகளை மன்னித்து வந்தார்கள்.**

**அவர்கள் என்ன செய்கின்றார்கள்? என்பதை கவனித்து வந்தார்கள். எனினும், சாதாரண விஷயங்களை மன்னித்து வந்தார்கள்.**

தாரீகே தபரியில் வருகின்றது:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது அதிகாரிகளையும், ஊழியர்களையும் கைது செய்தது கிடையாது. ஆயினும், கடும் குற்றமிழைத்தால் அன்னார் (ரலி) அவர்கள், அவருக்கு உகந்த எச்சரிக்கையை நிச்சயம் வழங்கி வந்தார்கள். அவர் பதவியின் அடிப்படையில் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் சரியே! ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமைய்யா (ரலி) அவர்களைக் குறித்து, முஸ்லிம்களை எள்ளி நகையாடி வந்த ஒரு பெண்ணின் பற்களை அன்னார் பறித்து விட்டார்கள் என்று தெரிய வந்தது. அப்போது, அன்னார் (ரலி) அவர்கள் உடனடியாக, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களைக் கண்டித்து கடிதம் எழுதினார்கள். எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் ஏதாவது தவறைக் குறித்து அன்னாருக்கு தெரிய வந்தால், அன்னாரைக் கண்டிப்பதிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாமதித்ததில்லை.

(அபூ அந்நஸ்ர் அவர்களின் மொழியாக்க நூல்-ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர், பக்கம்-695)

அமீர்மார்கள் மற்றும் கவனர்களின் பொறுப்புகள் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது:

பல்வேறு பகுதிகள், நகரங்கள் மற்றும் கிராமங்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நியமனம் செய்து வந்த கவனர்களுக்கு பல்வேறு பொறுப்புகளையும், பணிகளையும் அன்னார் (ரலி) அவர்கள் ஒப்படைத்து வந்தார்கள்.

அவர்கள் தமது பகுதிகளில் செல்வந்தர்களிடமிருந்து ஸகாத் வசூல் செய்து ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்து வந்தார்கள். முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து ஜிஸ்யா வரியை வசூல் செய்து பைத்துல் மாலில் ஒன்றுகூட்டி வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்து அவர்களுக்கு இந்த பொறுப்பு இருந்து வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நடைபெற்றிருந்த உடன்படிக்கைகளை அவர்கள் புதுப்பித்தனர். நஜ்ரான் பகுதியின் கவர்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் நஜ்ரான் வாசிகளுக்கிடையே செய்யப்பட்ட உடன்படிக்கைகளை புதுப்பித்தார். ஏனெனில், நஜ்ரான் வாசிகளின் கிறித்தவர்கள் அதற்கான கோரிக்கை வைத்தனர்.

அமீர்மார்கள் தத்தமது பகுதிகளில் மக்களுக்கு மார்க்க போதனை வழங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். மேலும், இஸ்லாமிய பிரச்சாரம் மற்றும் இஸ்லாத்தை பரப்புதல் போன்ற பணிகளில் முழுமையான பங்களிப்பை வழங்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலார் பள்ளிவாசல்களில் குழுக்களை உருவாக்கி மக்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய கட்டளைகளையும், ஒழுக்கங்களையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தை முழுமையாக பேணி வந்தார்கள். அவர்களின் இந்த பொறுப்புகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பார்வையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அமீர்மார்களும், கவர்னர்களும் இந்த பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றி வந்தனர். மிகவும் நன்றாக நிறைவேற்றினார்கள்.

எந்த அளவுக்கு என்றால், ஒரு வரலாற்று ஆசிரியர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் ஹிஸ்மௌத்தில் நியமிக்கப்பட்ட அமீர் ஸியாத் பின் லபீத் (ரலி) அவர்களைக் குறித்து இவ்வாறு எழுதுகின்றார்:

ஸியாத் (ரலி) அவர்கள் அமீர் ஆகுவதற்கு முன்னர் மக்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கு சென்றது போன்று காலை விடிந்ததும் மக்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க செல்வார்கள். இதேபோன்று, தஃலீம் மற்றும் தர்பிய்யத் மூலமாக இந்த அமீர்மார்கள் தமது பகுதிகளில் இஸ்லாத்தை பரப்புகின்ற பணிகளில் முக்கிய பங்காற்றினார்கள்.

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 13 October 2022 Issue No. 41

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வெற்றிக் கொள்ளப்பட்ட பகுதிகளிலும், முர்தத்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களின் பகுதிகளிலும் இதே தஃலீம் பணிகளின் மூலமாகவே இஸ்லாம் வலிமையடைந்தது. எந்தப் பகுதிகளில் புதிதாக மக்கள் முஸ்லிம்கள் ஆகியிருந்தார்களோ, மேலும் எந்தப் பகுதிகளில் மார்க்கப் கட்டளைகளை மக்கள் அறியாதவர்களாக இருந்தனரோ அந்தப் பகுதிகளில் இந்த தஃலீம் பணிகள் மூலமாக சிறந்த விளைவு கிடைத்தது. அதேநேரம் இஸ்லாத்தின் வலிமையான தலைமையகமான மக்கா, தாயிஃப் மற்றும் மதீனா நகரத்திலும் மக்களுக்கு தஃலீம் மற்றும் தர்பிய்யத் வழங்கக் கூடிய முஅல்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவை அனைத்தும் அவர்களது கலீஃபா அல்லது அமீரின் கட்டளைக்கேற்ப நடைபெற்று வந்தது. அல்லது எவர்களை கலீஃபா குறிப்பாக பல்வேறு பகுதிகளில் தஃலீம் பணிக்காக நியமித்திருந்தார்களோ அவர்கள் இந்தக் கடமையை ஆற்றி வந்தார்கள்.

பகுதிகளின் அமீர் அல்லது கவர்னர் தமது மாநிலத்தின் நிர்வாக ஏற்பாடுகளுக்கு நேரடியான பொறுப்பாளராக இருந்தார். அவருக்கு ஏதாவது பயணத்தில் செல்ல நேரிட்டால் அவர் தமது பிரதிநிதியை நியமித்து வந்தார். அந்த பிரதிநிதி அவர் திரும்பி வரும் வரை நிர்வாக ஏற்பாடுகளை கண்காணித்து வந்தார். அதற்கான உதாரணம் இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமைய்யாவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கிந்தாவின் கவர்னராக நியமனம் செய்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு,ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாரை அதே பொறுப்பில் தொடரச் செய்தார்கள். முஹாஜிர் அவர்களால், தமது நோயின் காரணமாக ஏமனிற்கு செல்ல முடியவில்லை. அன்னார் மதீனாவிலேயே தங்கிவிட்டார்கள். மேலும் தான் குணமடைந்து ஏமனிற்கு திரும்பி வரும் வரை தமது இடத்தில் ஸியாத் பின் லபீத் (ரலி) அவர்களை நியமித்து தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அன்னாரை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அந்த விஷயத்திற்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். அதேபோன்று, ஈராக்கில் கவர்னராக இருந்தபோது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹீராவில் தாம் திரும்பி வரும் வரை தமது பிரதிநிதியை அங்கு நியமித்து வந்தார்கள்.

(அப்துல் மாலிக் முஜாஹித் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் அற்புதமான சம்பவங்கள், பக்கம் 188-189, மக்தபா தாருஸ் ஸலாம் அர்ரியாஸ்)

இந்த நற்குறிப்பு தொடர்கின்றது. இன்ஷாஅல்லாஹ் எதிர் வரும் நாட்களிலும் எடுத்துரைக்கப்படும்.

தமிழாக்கம் : மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் புறமிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனைகளின் வடிவில் வெளியிடப்படும் புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை 6 கோடியை எட்டிவிட்டது. ஒரு வகையில், இந்தியாவில் உள்ள முஸ்லிம்களில் ஒவ்வொரு நபரின் கையிலும் இந்த மக்கள் புத்தகங்களை கொடுக்க முடியும். எனவே, மாபெரும் குழப்பம் இந்த கிறிஸ்தவ குழப்பமே ஆகும். மேலும், 'அத்தஜ்ஜாலின்' பெரும் ஆதிக்கம் உள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 402, காதியான் பதிப்பு 2018)

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

தன்மையின் அடிப்படையில் தூயவையாக இருப்பவை.

தய்யப்-தனது தற்போதைய நிலையிலும் தூய்மையாக இருப்பவை. அதாவது, எதனை எல்லா நிலையிலும் உண்பது ஆகுமானதோ அவற்றை ஹலால் என்று கூறுவர். உதாரணமாக, ஆடு ஹலால் ஆகும்.

ஆனால், வேக வைக்காத நிலையில் உள்ள இறைச்சியை உண்ண முடியாது. எனவே அந்நிலையில் அவை தய்யப் எனும் தூய்மையானதாக இருக்காது. ஆனால், அதனை சமைத்து சாப்பிடுவது தய்யப் ஆகும்.

சிறந்த உணவு ஹலால் மற்றும் தய்யப் ஆன உணவாகும். அதன் பிறகு உள்ள மற்ற பொருட்கள் மம்நூஃ ஆகும். அவற்றை உண்பது சரியல்ல. உதாரணமாக, மருத்துவர் காலரா நோயின் நாட்களில் வெள்ளரிக்காய் உண்பதை தடுத்து விடுவதாகும். வெள்ளரிக்காய் சாதாரண நாட்களில் ஹலாலாகவும், தய்யப் ஆகவும் உள்ளது. ஆயினும், அந்த (நோய்வாய்பட்ட) நாட்களில் ஹலால் ஆக இருந்தபோதிலும் தய்யப் ஆக இருக்காது. ஹராம் ஆக்கப்பட்ட விஷயங்களுக்கு பிறகு வரும் பொருட்கள் உள்ளன. அதாவது, மம்நூஃ ஆகும். அவற்றை உண்பதும் சரியானதல்ல என்றே நாம் அவற்றைக் குறித்து கூறுவோம். அதாவது அவற்றை உண்பதால் மனிதன் பாதிப்படைகின்றான்.

சுருக்கமாக, தூய்மையானவை என்பதற்கு எங்கு உடல்ஆரோக்கியத்தின் அடிப்படையில் நல்லதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதோ அங்கு அதனை உண்பதால் மனிதனின் ஏனைய உணர்வு அல்லது மற்ற மனிதனுடைய அல்லது மற்ற படைப்பினத்தின் உரிமை பறிக்கப்படாமல் இருப்பதும் நிபந்தனையாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 262,
காதியான் பதிப்பு 2010)

* * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad